## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனியின் பங்குகளில் 62.45 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட போதிலும், உயர் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

வங்கி மேலதிகப்பற்று வசதியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணி மற்றும் தனியார் கம்பனியொன்றிற்கு சுண்ணாம்புக் கல் சுரங்கத்தினை குத்தகைக்கு வழங்கியமையால் கிடைக்கும் வருமானம் என்பவற்றை பிணையாக வைத்து வங்கியிடமிருந்து ரூபா 26,916,193 வங்கி மேலதிகப்பற்றும் ரூபா 40,000,000 கடன் தொகையும் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அப்பிணைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமானத்தேய்விட்டு முடிக்கப்பட்ட இருப்பினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 5,096,661 கிரயமான கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் வாகனங்கள் மீள விலைமதிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 1990 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ரூபா 5,719,771 பெறுமதியான 02 டிரக்டர்கள், 03 டிரைலர்கள், 04 மோட்டார்

சைக்கிள்கள் மற்றும் உதிரிப்பாக இருப்பு போன்றன நிதிக்கூற்றுக்களில் இருப்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யாழ்ப்பாணக் கிளையின் பரீட்சை மீதிக்கும் நிதிக்கூற்றிலுள்ள அதனுடன் தொடர்புடைய மீதிக்குமிடையே ரூபா 5,424,828 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் படி, தலைமை அலுவலகத்தின் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மீதி ரூபா 114,103,084 ஆகக் காணப்பட்டதுடன், காலப்பகுப்பாய்வின் படி அது ரூபா 113,031,656 ஆக காணப்பட்டமையால் ரூபா 1,071,428 வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதி ரூபா 839,200,063 ஆகும். அதில் ரூபா 13,435,491 தொகை 2 ஆண்டுகளிற்கும் மேல் பழமையான மீதியாக காணப்பட்டதுடன் ரூபா 35,307,781 தொகை 3 ஆண்டுகளிற்கும் மேல் பழமையான மீதியாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மீதி ரூபா 616,960,673 ஆகும். அதில் ரூபா 5,286,079 தொகை 2 ஆண்டுகளிற்கும் மேல் பழமையான மீதியாக காணப்பட்டதுடன் ரூபா 22,526,199 தொகை 3 ஆண்டுகளிற்கும் மேல் பழமையான மீதியாகும்.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்காக அவற்றின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றைத் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 547,395,912 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை, உரித்தாவணம், |
| (ஆ) | இருப்புக்கள் | 22,843,266 | பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| (இ) | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதி | 81,796,180 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (ஈ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மீதி | 124,791,483 | |
| (உ) | வங்கி மேலதிகப்பற்று | 26,916,194 | |
| (ஊ) | நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 563,973,594 | |
| (எ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 125,952,196 | |
| (ஏ) | நீண்ட காலக்கடன் (லங்கா சீமெந்துக் கம்பனி) | 757,223,883 | |
| (ஐ) | வங்கி மீதி | 3,084,430 | மீதி உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 6,850,515 ஆன தேசத்தை கட்டியெழுப்புதல் வரித் தொகை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி | (i) மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 2.1 ஆம் பிரிவு | ரூபா 4,752,790 ஆன பெறுமதிசேர் மீதான வெளியீட்டு வரித் தொகை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) ரூபா 6,431,738 ஆன பெறவேண்டிய பெறுமதிசேர் மீதான உள்ளீட்டு வரித் தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 இன் 6 ஆம் இலக்க மேல் மாகாண நிதி ஒழுங்குவிதிகளின் 3 ஆம் பிரிவு | மேல் மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 7,101,932 தொகையான வியாபாரப் புரள்வு வரி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நி.பி. 756 | நிதி ஆண்டு முடிவுற்றவுடன் ஒவ்வொரு சொத்து தொடர்பிலும் மெய்மையாய்வினை மேற்கொண்டு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, கணனி உதிரிப்பாகங்களும் மென்பொருட்களுக்குமாக சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளால் கூட்டுத்தாபனம் ரூபா 70,382,929 பற்றாக்குறையொன்றை ஈட்டியிருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,600,231 ஆக காணப்பட்டது. இதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 72,983,160 அல்லது 2,807 சதவீதம் பின்னடைவாகக் காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 72,983,160 பின்னடைவிற்கு பின்வரும் விடயங்கள் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(அ) மீளாய்வாண்டில் சர்வதேச நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்ட ரூபா 38,704,668 ஆன இழப்பீட்டுத் தொகை மற்றும் ரூபா 3,458,588 ஆன நிதிக் கிரயம்.

(ஆ) முன்னைய ஆண்டின் விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 294,138,005 ஆல் அல்லது 45 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை.

(இ) மீளாய்வாண்டின் மொத்த விற்பனை ரூபா 361,933,397 ஆக காணப்பட்டதுடன் அதனுடன் தொடர்புடைய விற்பனைக் கிரயம் ரூபா 383,935,878 ஆக காணப்பட்டமையால் மொத்த நட்டம் ரூபா 22,002,481 ஆக காணப்பட்டமை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காங்கேசன்துறை சீமெந்துக் கொங்ரீட் உற்பத்தி மற்றும் விற்பனைப் பிரிவின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் செலவினங்களை செய்யவேண்டி ஏற்பட்டிருந்ததன் காரணமாக தொடர்ச்சியாக நட்டமீட்டியிருந்ததுடன் முன்னைய ஐந்து ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் நட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | நுட்டம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2007 | 1.54 | 21.06 | 19.52 |
| 2008 | 17.92 | 24.78 | 6.86 |
| 2009 | 36.89 | 43.99 | 7.10 |
| 2010 | 27.33 | 27.36 | 0.03 |
| 2011 | 6.86 | 16.28 | 9.42 |
| 2012 | 32.46 | 38.12 | 5.66 |

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டில் 121,000 சீமெந்து மெற்றிக் தொன்களை விற்பனை செய்வதற்கும் அதன் மூலம் ரூபா 1,597,200,000 வருமானத்தை ஈட்டுவதற்கும் இலக்கிடப்பட்டிருந்தது. இருப்பினும், உள்ளபடியான விற்பனை ரூபா 361,933,397 ஆக காணப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட மொத்த விற்பனைகளில் 23 சதவீதம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. எந்தவொரு மாதத்திலும் எதிர்பார்க்கப்பட்ட விற்பனையை அடைந்து கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் செயன்முன்னேற்றம் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் நோக்குடன் 2012 ஆம் ஆண்டில் மாதமொன்றிற்கு 400 சீமெந்து மெற்றிக் தொன்களை ஏற்றுமதி செய்வதற்கும், கொள்ளுப்பிட்டியில் காணப்படும் காணியில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கும், காங்கேசன்துறை தொழிற்சாலையின் சீமெந்துக் கம்பங்களின் உற்பத்தியினை வருடாந்தம் 3000 கம்பங்கள் வரை அதிகரிப்பதற்கும், காங்கேசன்துறையில் புதிய சீமெந்துப் பொதியிடல் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்குகளில் எதனையும் அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை முடியாது போயிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் அருவக்காலுவில் அமைந்துள்ள 5,352 ஏக்கர் சுண்ணாம்புக்கல் சுரங்கம் 1995 ஆம் ஆண்டில் சீமெந்தினை உற்பத்தி செய்வதற்கான சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்தெடுப்பதற்காக தனியார் சீமெந்து உற்பத்திக் கம்பனியொன்றிற்கு 50 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, அறவிடப்பட வேண்டிய வாடகை ஆண்டிற்கு ரூபா 22,478,228 ஆகும். இருந்த போதிலும், ஏற்படுத்திக் கொண்டிருந்த குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனையின் படி 50 ஆண்டிகளின் போதும் வாடகையினை திருத்தும் சந்தர்ப்பம் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. இந்நிலமை 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் கவனத்திலெடுக்கப்பட்டு சுண்ணாம்புக்கல் சுரங்க உடன்படிக்கையினை குத்தகை உடன்படிக்கையினை

மீளத் திருத்தியமைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக புத்தளம் பாலாவி மற்றும் கல்லடி பிரதேசங்களில் காணப்பட்ட ஏறத்தாழ 150 ஏக்கர் காணி பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது பயனற்றுக் காணப்பட்டது. அதில் 09 ஏக்கர் காணியில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் வீடுகளை நிர்மாணித்து குடியேறியிருந்தனர். பாதுகாப்பற்றும் பயன்படுத்தப்படாதும் இக்காணி புதர்கள் சூழ்ந்து காணப்பட்டமையால் அத்துமீறிய குடியேறல்களை தவிர்க்க முடியாதுள்ளது.

(இ) 2003 ஆம் ஆண்டில் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 5100 சீமெந்துப் பைகளிற்காக விற்பனை முகவர் ஒருவர் வழங்கியிருந்த ரூபா 1,656,000 தொகைக்கான காசோலை மதிப்பிழந்திருந்தது. அத்தொகையை சட்டரீதியான வட்டியுடன் அறவிடுவதற்காக 2008 பெப்ரவரி 11 ஆந் திகதி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வழக்குத் தீர்ப்பின் படி முகவரின் பொருட்கள் மற்றும் ஆதனங்கள் நீதிமன்றத்தால் தடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனங்களை ஏலத்தில் இட்டேனும் கூட்டுத்தாபனத்திற்கு 10 ஆண்டுகளாக நிலுவையாகவுள்ள தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடன் அடிப்படையில் சீமெந்தினை விற்பனை செய்வதற்காக விற்பனை முகவர் பதவிகளை வழங்குகையில் கடனிற்கு வழங்கப்படும் பெறுமதிக்குச் சமமான தொகைக்கு பிணைமுறியொன்றைப் பெற்றுக்கொள்ளாமை, கடன் வழங்கக்கூடிய உச்ச எல்லை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்காமை, கடன் ஏய்ப்புச் செய்வோர்களிடமிருந்து கடனை அறவிடுவதற்கான முறையினை உடன்படிக்கையில் உள்ளடக்கியிருக்காமை, கடனைச் செலுத்துவதற்கு தவறியிருக்கையிலும் மீண்டும் மீண்டும் கடன் வழங்கப்பட்டிருந்தமை, வங்கிப் பிணைக்காக பொய்யான தகவல்களை வழங்கியிருந்தமை, முறையற்ற விதத்தில் கடன்களை அங்கீகரித்திருந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்காமை மற்றும் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை போன்ற முகாமைத்துவச் செயற்திறனின்மைகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட முடியாதிருந்த கடன்களின் மொத்த மீதி ரூபா 44,467,236 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 3,832,137 தொகை 09 ஆண்டுகளைத் தாண்டிய பழமையான கடன் மீதியாகும்.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,088,418,910 தொகை இரண்டு தனியார் கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரை எவ்வித பிரதிபலனும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

**3.4 சர்வதேச கம்பனியொன்றிற்கு இழப்பீடு செலுத்துதல் - ஐ.அ.டொ. 300,000**

1990 ஆம் ஆண்டில் சீமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருளான ''கிளின்கர்'' இறக்குமதி செய்வதற்காக கூட்டுத்தாபனத்தால் ஐக்கிய அமெரிக்க குடியரசில் அமைந்துள்ள பல்தேசியக் கம்பனியுடன் இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. அந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் படி கம்பனியால் ஐ.அ.டொ. 475,000 முகப்பெறுமதி கொண்ட பிணை முறியொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் உள்நாட்டு வங்கியொன்றின் ஊடாக ''கிளின்கர்'' இறக்குமதிக்குத் தேவையான நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தது.

உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான ''கிளின்கர்'' வழங்குவதற்கு குறித்த கம்பனி தவறியிருந்தமையால் அதன் கோரிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் நாணயக் கடிதங்களின் காலம் இரண்டு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், கூட்டுத்தாபனத்தின் நலன் கருதியும் சீமெந்து உற்பத்தி குறைவடைவதனால் ஏற்படக் கூடிய நட்டத்தினை குறைப்பதற்காகவும் அவ்வாறான கோரிக்கைக்கு இனிமேலும் இடமளிக்காமையாலும் உரியவாறு ''கிளின்கர்'' வழங்கப்படுதல் இடம்பெறாமையாலும் முகப்பெறுமதி பிணைமுறியை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவுடன் கூட்டுத்தாபனத்திற்கும் குறித்த கம்பனிக்கும் இடையே கருத்து முரணான நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் இரு தரப்பும் ஒருசில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் இறுதி நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு தவறியிருந்தன.

இது தொடர்பில் அப்போது கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வரிசை அமைச்சும் சட்டமா அதிபர் திணைக்களமும் இணைந்து இரண்டு தரப்பினதும் இணக்கப்பாட்டுடன் 2002 ஆம் ஆண்டில் உலக வங்கியின் பல் தரப்பு சர்வதேச சான்றுறுதிப்படுத்தல் முகவர் நிறுவனத்தின் தலையீட்டின் காரணமாக கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் மயப்படுத்தப்பட்ட புத்தளம் சீமெந்துக் கம்பனியுடன் இணைந்து மேற்படி கம்பனிக்கு ஐ.அ.டொ. 1.3 மில்லியன் இழப்பீட்டை செலுத்துவதற்கு இறுதி இணக்கப்பாட்டிற்கு வரப்பட்டிருந்தது. அதன் படி தனியார் கம்பனியால் ஐ.அ.டொ. ஒரு மில்லியன் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய தொகை நிதிப் பிரச்சினை காரணமாக செலுத்துவதற்கு தாமதிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், சர்வதேச ரீதியில் இலங்கையின் நன்மதிப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக திறைசேரியின் ஏற்பாட்டிலிருந்து இழப்பீட்டினை செலுத்துவதற்கு 2012 நவம்பர் 01 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு மேற்குறித்த கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ஐ.அ.டொ. 300,000 இற்குச் சமனான ரூபா 38,704,668 தொகை வங்கிக் கடன் வசதியினை பயன்படுத்தி மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கல்லான 6,036 சீமெந்துப் பைகள் பீசீசீ களஞ்சியத்திலும், 8,295 பைகள் பேலியகொட களஞ்சியத்திலும் வைக்கப்பட்டிருந்தமை கண்டெடுக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது. அக் கல்லான சீமெந்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,100,000 இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) பொருத்தமான நிதி முகாமைத்துவம் இல்லாமை காரணமாக மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வங்கி மேலதிகப்பற்றிற்காக ரூபா 3,395,384 வங்கி மேலதிகப்பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 28,249 மெற்றிக் தொன் சீமெந்து அல்லது 576,156 பைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அதில் 221 பைகள் காணாமல் போயிருந்தன. காணாமல் போயிருந்த பைகளின் பெறுமதி ரூபா 163,578 ஆகும்.

## 3.6 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்தினால் ரூபா 550,000 தொகை செலவிடப்பட்டு கன்வேயர் இயந்திரமொன்று 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குத் தேவையான உதிரிப் பாகங்களிற்காக ரூபா 27,429 செலவிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் இந்த இயந்திரம் எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட வளங்கள்

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் வளங்களை வரிசை அமைச்சின் நடவடிக்கைகளிற்காக வழங்கப்படலாகாத போதிலும் அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 4,800,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கெப் வாகனம் வரிசை அமைச்சின் நடவடிக்கைகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன குறித்த வருடம் முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2011 – 2015 வரையான ஐந்து ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த தூர நோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், முற்காலத்தில் நாட்டின் ஒரோயொரு முன்னணி சீமெந்து உற்பத்தியாளராகவும் விற்பனையாளராகவும் காணப்பட்ட கூட்டுத்தாபனம் தற்போது சீமெந்து உற்பத்தியினை முழுமையாக கைவிட்டு சீமெந்தை இறக்குமதி செய்வதுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயலாற்றலை காலத்திற்கேற்ப மீளாய்வுசெய்ய வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு தொடர்பில் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் 2012 ஆம் ஆண்டிற்குரிய பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| ஊழியர் வகை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 07 | 08 | - | 01 |
| நிறைவேற்றுத் | 24 | 16 | 08 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| தரமற்ற ஏனையோர் | 45 | 38 | 07 | - |
| மொத்தம் | 76 | 62 | 15 | 01 |

அங்கீகரிக்கப்படாத நிறைவேற்றுத் தரத்தில் ஒரு பதவி மேலதிகமாக காணப்படுதல் சிக்கலாக காணப்பட்ட போதிலும், நிறைவேற்றுத் தரமற்ற 08 வெற்றிடங்களும் ஏனைய 07 வெற்றிடங்களும் காணப்படுதல் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு சவாலாகியுள்ளது. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட தொகைகளிற்கும் உள்ளபடியான தொகைகளிற்குமிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்கள்

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு